RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s-222915

# உளவியல் நோக்கில் மணிமேகலை

**ச. குருஞானாம்பிகா [அ, *]**

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்-641043, தமிழ்நாடு, இந்தியா.

# Manimegalai from Psychological View

**S. Gurugnanambiga [a, *]**

[a] Department of Tamil, Avinashilingam Institute for Home science and Higher Education for Women, Coimbatore-641043, Tamil Nadu, India

* Corresponding Author: guruambika@gmail.com

Received: 21-09-2022
Revised: 10-11-2022
Accepted: 17-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

Manimegalai is one of the five major epic in Tamil literature and one among of the Irattai kappiyams. Although the purpose of this work is to highlight the Buddhist religious ideas. In addition Manimegalai also conveys humanity, compassion for life, maintenance of common welfare. Through the chara6 Manimegalai the author illustrates the meaning of preserving the commonality, humanity and reaching for the boundless simplicity of the past. This article is based on the psychological background of knowing that how Manimegalai travels beyond the home when the society in that period restrict women to go out and women had very less opportunities to engage in public charity.

**Keywords:** Unconscious, Personality, Motivation, Preatige, Effectors

## முன்னுரை

இலக்கியம் மக்களின் வாழ்க்கையை பிரதிபலிக்கிறது. இலக்கியத்தில் வரும் மாந்தர்களின் உளவியலை அடிப்படையாகக் கொண்டே படைப்பின் நகர்வு தொடங்குகிறது. மனிதனின் மன உணர்வை வெளிப்படுத்துவதையே படைப்புகள் முதன்மையாகக் கொண்டிருக்கின்றன. இலக்கியங்களில் இடம்பெறும் மாந்தர்கள் படைப்பாளியின் மனநிலையை பிரதிபலிக்கின்றனர். தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் வாழ்க்கையை அடிப்படையாக வைத்து அமைந்தவையேயாகும். முற்றிலும் உளவியல் சிந்தனைகளால் அவை உருவாக்கப்பட்டு இருக்கின்றன மனிதனின் ஒவ்வொரு செயலுக்குப் பின்னும் உள்ளமே உந்து சக்தியாக செயல்படுகிறது. அத்தகைய உள்ளத்தை பல உளவியல் அறிஞர்கள் ஆராய்ந்திருக்கிறார்கள். அவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்களுள் பிராய்டு முக்கியமானவர். உளவியலை அடிப்படையாகக் கொண்டு மணிமேகலைக் காப்பியத்தை அணுகுவது கட்டுரைப் பொருளாக அமைகிறது.

## உளவியல்

உளவியல் என்பது மனித உள்ளம் உடல், உணர்ச்சிகள், நடத்தைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைவதால் உளவியல் நடத்தை பற்றிய அறிவியலாக அறியப்படுகிறது. மனிதனின் அகவாழ்வு குறித்த மேம்பாட்டிற்கும், உயர்விற்கும் வழி வகுப்பது உளவியல் ஆகும்.

உளவியலாளர்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் உளவியலுக்குள்ள தொடர்பையும், அத்தொடர்பினால் விளையும் பல்வேறு பயன்களையும் விவரித்துள்ளனர்.

உளவியலில் 'உளப்பகுப்பு கோட்பாடு' என்னும் பிரிவு ஒன்று உண்டு. இக்கோட்பாட்டினர் நடத்தைக்கு முக்கியக் காரணங்களாகத் திகழ்பவை நினைவு நிலைக்குக் கீழான நினைவிலி உள்ளத்தில் உறையும் எண்ணங்களை அன்றி, நனவு நிலை நோக்கங்கள் அல்ல என்று அறியப்படுகிறது. "உளவியலை நனவுநிலை பற்றிய இயல் என்று மட்டும் கொண்டால் மனித நடத்தையின் அடிப்படை காரணிகள் எனப்படும் நினைவிலி நோக்கங்களும் இவற்றால் ஊக்குவிக்கப்படும் செயல்களும் உளவியல் ஆராய்ச்சிக்கு புறம்பானமை ஆகிவிடும் மற்றும் தொடர்ந்து செயல்படுவதன் விளைவாக நனவின்றி செய்யும் பழக்கங்களாக உருப்பெற்றுள்ள செயல்களை பற்றியும் உளவியல் ஆராய்ந்து அறிய வேண்டியுள்ளது எனவே இன்று உளவியலாளர்கள் மனித நடத்தை பற்றிய அறிவியல் உளவியல் என விளக்குகின்றனர் (TU, 1991).

உளவியல் மனித உள்ளம் உடல் உணர்ச்சிகள் நடத்தைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது உளவியலை நடத்தை பற்றிய அறிவியல் என்பர் (Kanchana, 2000).

பெருஞ்சொல்லகராதி மன இயல் உள்ளம் பற்றிய அறிவியல் என உளவியலுக்கு விளக்கம் தருகிறது.

தமிழ்ச் சொல்லகராதி உளவு என்பதற்கு ரகசியம் உட்காரியம் உக்கிடை என்றும் உளவு சொல்லல் என்பதற்கு உள்ளவைகளை அறிந்து சொல்லல் என்றும் பொருள் விளக்கம் தருகின்றது (Catheraverpillai, 1984).

## மணிமேகலை

மணிமேகலையின் காப்பியத் தலைவி மணிமேகலை. கோவலன் மாதவியின் மகள். தன் தாயின் விருப்பத்திற்கு ஏற்ப பௌத்த சமயத் துறவியாக துறவறம் பூண்டவள். முற்பிறப்பின் வினையால் உதயகுமாரினிடம் தன் மனம் செல்வதைத் தடுக்க முயல்கிறாள். பிறகு தன் விருப்பப்படியே புத்தத்துறவியாகி, மக்களின் பசியைப் போக்குவதையேத் தன் கடமையாக் கொண்டு வாழ்ந்தாள். சிறைக்கோட்டத்தினை அறக்கோட்டமாக மாற்றியவள். இராசமாதேவி தன் மகன் இறப்பிற்கு மணிமேகலையே காரணம் என்று இழைத்தத் துன்பங்களை எல்லாம் பொறுமையுடன் தாங்கிக் கொண்ட தன்மையுடையவள். பிற சமயத்தை அறிந்து கொள்ள ஆர்வம் உடையவளாகவும் விளங்கினாள்

## உருவ ஆளுமை

மணிமேகலை அழகும், இளமையும் வாய்ந்தவள். தான் பிறந்தது கணிகையர் குலம் என்றாலும், அதை மறந்து உயிரின் சிறந்த பண்பு அன்பு செலுத்துதல் என்பதை கடமையாக் கொண்டு வாழ்ந்தவள். மாதவியும், மணிமேகலையை மரபு வழியான கலையில் ஈடுபடுத்தாமல் அன்பில், அறத்தில் திளைக்கக்கூடிய மாண்புடையவளாக வாழக் கூறியவள். மணிமேகலை புத்தநெறியில் பெண்மையும் துறவும் கொண்டு பற்றற்ற வாழ்க்கை வாழ இயலும் என்பதை நிரூபித்துள்ளாள் (Hemalatha, 2020).

"மேவிய பளிங்கின் விருந்தின் பாவை இது
ஓவியச் செய்தி என்றொழிவேன் முன்னர்க்
காந்தளஞ் செங்கை தளைபிணி விடாஅ
ஏந்திள வனமுலை இறைநெறித் ததூஉம்
ஒத்தொளிர் பவளத்துள்ளொளி சிறந்த
முத்துக்கூர்த் தன்ன முள்ளெயிற் றமுதம்

அருந்தே மாந்த ஆருயிர் தளிர்ப்ப விருந்தின் மூரல்

அரும்பிய தூஉம் மாயிதழ் குவளை மலர்புறத் தோட்டிக்

காய்வேல் வென்ற கருங் கயல் நெடுங்கண்”

இவ்வடிகள் வாயிலாக உதயகுமாரன் மணிமேகலையின் அழகை ஓவியச் செய்தி என உரைக்கிறான்.

## ஊக்கி-சொல் விளக்கம்

உயிர்களது நடத்தை இலக்கை நோக்கி மேற்கொள்ளப்படும் செயலாகும். “ஊக்கம் என்று செயல் அதாவது ஊக்குவித்தல் நடைபெற தூண்டும் காரணிகளை ஊக்கிகள்"(5) என்று குறிப்பிடுகிறோம் என்பர். ஒரு உயிரின் நடத்தை அமைய ஊக்கிகள் அதனைத் தூண்டுகின்றன."ஊக்கி என்பது ஆங்கிலச் சொல்லான மோட்டிவ் என்பதன் உட்படுத்து இயக்குவித்தல் என்பதுடன் தொடர்பு கொண்டது என்று குறிப்பிடுவர் (Meenaktchi Sundaram, 2009).

## சிந்தனைத்திறன்

சிந்தனைத் திறன் என்பது ஆறறிவு உடைய மனிதருக்கே உரியதாகும். மனிதனுக்கு ஏற்படக்கூடிய இன்னல்களுக்கு உரிய தீர்வு காண, மனதின் சிந்தனைத் திறன் உதவுகிறது. மணிமேகலையும் தனக்கு ஏற்பட்ட இந்த பெரும்பான்மையான சிக்கல்களுக்குத் தன் சிந்தனை திறனால் தீர்வு காண்கிறாள். உதயகுமாரன் தன்னை அடைவதற்காக காத்திருப்பதனை அறிந்த மணிமேகலை, தன் சிந்தனைத் திறனால் மந்திரம் கூறி காயசண்டிகை வடிவம் கொள்கிறாள்.

"மாயவிஞ்சை மந்திரம் ஓதிக்

காயசண்டிகை எனும் காரிகை வடிவாய்

மணிமேகலை தான் வந்து தோன்ற"

என்ற அடிகள் மணிமேகலை உதயகுமாரனிம் இருந்து தப்பிக்க மேற்கொண்ட உத்தியை விளக்குகின்றன. இதன் வழியாக தனக்கு கிடைத்த வேற்று வடிவம் கொள்ளக்கூடிய வரத்தினை உரிய நேரத்தில் பயன்படுத்திய மணிமேகலையின் சிந்தனைத் திறனை அறிய முடிகிறது.

## சொல்திறன்

மணிமேகலை அனைவரையும் கவரக்கூடிய திறமையான சொல் திறன் பெற்றவளாக திகழ்கிறாள். உதயகுமாரனிடம் இளமை நிலை இல்லாதது எனக் கூறியதோடு மட்டுமல்லாமல், ஒரு மூதாட்டியின் உருவத்தை சுட்டிக்காட்டி, புற உருவம் அழிவையே தரும் என நயம் பட க்கூறும் தன்மை அவளது சொல் திறனை விளக்குவதாக அமைந்துள்ளன.

"நரைமுதாட்டி ஒருத்தியைக் காட்டித் தன்னிறழல் வண்ணம் திரிந்து வேறாகி

தூசினும் மணியினும் தொல்லோர் வகுத்த

வஞ்சம் தெரியாய் மன்னவன் மகனென விஞ்சை மகளாய் மெல்லியலுரைத்தலும்"

என்ற அடிகள் வாயிலாக மணிமேகலை இளமை பருவம் நிலையில்லாது என்பதை எடுத்துரைத்து, காமத்தினை நீக்குவதோடு மட்டுமல்லாமல் பிறருக்கு அறம் புரிவது நன்மை பயக்கும் என்பதனை உணர்த்தக்கூடிய சொல் வளத்தினை கொண்டவளாக திகழ்வது காணமுடிகின்றது (Chithalai Saathanar, 2010).

## செயல்திறன்

தவறு செய்தவர்களை தண்டிக்கும் பொருட்டு, சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட கைதிகளுக்கு உணவு வழங்கப்படாமல் கொடுமைக்கு உள்ளாயினர் உள்ளாக்கினர். அதனை அறிந்த மணிமேகலை சிறைச்சாலைக்கு சென்று, சிறையில் உள்ளோரை விடுவித்து, அச்சிறைச்சாலையை அறக்கோட்டமாக மாற்றுவதற்கு அனுமதி பெறுகின்றாள். இதனால் குற்றவாளிகள் நிறைந்து சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக மாற்றம் பெறுகிறது. சிறைச்சாலையில் அடிமைப்பட்டு இருந்த மக்களுக்கு பசியை தீர்க்கும் விதமாக மணிமேகலையும் செயல் ஊக்கி செயல்படுகிறது. அவளது வேண்டுகோளுக்கு ஏற்ப கிள்ளிவளவன் சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றிய செயலினை,

"அருஞ்சிறை விட்டாங்கு ஆயிழை உரைத்த

பெருந்தவர் தம்மாற் பெரும் பொருள் எய்தக்

கறையோரில்லாச் சிறையோர் கோட்டம்

அறவோர்க்கு ஆக்கினன் அரசாள் வேந்தென்

என்ற அடிகளின் வழி அறிய முடிகிறது (Chithalai Saathanar, 2010). இதன் வழி இயல்பிலேயே பிற உயிர்கள் துன்பமடைய கூடாது என்று நல்ல குணத்தை உடையவளாக மணிமேகலை அடையாளப்படுத்தப்படுவதை அறிய முடிகிறது. ஒரு நாட்டை ஆளும் மன்னன் என்பதை அறிந்தும் தன் மனதில் பட்ட கருத்தினை அவருக்கு எடுத்துரைக்க கூடிய செயல் திறன் மிக்கவளாக விளங்குவதைக் காண முடிகிறது.

## செயல்துடிப்புடன் இருத்தல்

மணிமேகலை உலக உயிர்களின் பசித்துன்பம் போக்குவதற்காக அமுதசுரபியை கையில் ஏந்துகிறாள். கற்புடைய மாதர்கரத்தால் முதல் பிச்சை கேட்பது தகுதி என்று எண்ணுகிறாள். காயசண்டிகையின் அறிவுறுத்தலின் பேரில் ஆதிரையிடம் பிச்சை ஏற்க செல்கிறாள். சம்பாவதியின் கோவிலிலிருந்து எங்கும் சென்று பசித்தோர் துன்பத்தை நீக்குகிறாள். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தவர் என்று வாக்கினை மெய்ப்பிக்கும் விதமாக தான் கொண்ட கொள்கையில் மாறாமல் உலக மக்களின் பசிப்பிணியை போக்க வேண்டும் என்ற செயல் துடிப்புடன் திகழ்ந்ததை,

"தொழுது வளம் கொண்டு துயரறி கிளவியோடு

அமுத சுரபியின் அகன்சுரை நிறைதர

பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுகென

ஆதிரை இட்டனள் ஆருயிர் மருந்தென்"

என்ற அடிகள் எடுத்துரைக்கின்றன (Chithalai Saathanar, 2010).

## மனம் சார்ந்த தேவைகளிலிருந்து எழும் ஊக்கிகள்

"ஒருவருடைய ஊக்கியானது மற்றவருடைய ஊக்கிகளில் வேறுபடும் தன்மையை காணலாம்". மனிதர்களது தேவைகளுக்கு ஏற்ப அவர்களது வெளிப்படுத்தும் திறன்கள் வேறுபடுகின்றன மனம் சார்ந்த தேவைகளில் இருந்து எழும் போக்குகளை "காப்புணர்ச்சி, விடுதலை உணர்ச்சி, துணிவு" என்று மூன்று வகையாக சுட்டுவர் (Meenaktchi Sundaram, 2009).

## காப்புணர்ச்சி

ஒவ்வொரு மனித செயலும் காப்புணர்ச்சியை பெறுவதாக அமையும். காப்புணர்ச்சி இருவகைப்படும். "பிறரது துணையில் தோன்றும் காப்புணர்ச்சியை சார்புள்ள காப்புணர்ச்சி என்றும் பிறர்

உதவி இன்றி தன் திறன் கொண்டு வெற்றி பெற முடியும் என்ற தன்னம்பிக்கையை பெறுவது சார்பற்ற காப்புணர்ச்சி" என்றும் குறிப்பிடுவர் (Meenaktchi Sundaram, 2009). இவற்றுள் மணிமேகலை சார்பற்ற காப்புணர்ச்சியை பெற்று திகழ்கிறாள். இதனை,

"தேவி வஞ்சம் இதுவெனத் தெளிந்து

நாவியன் மந்திரம் நடுங்கா தோதி

ஆண்மைக் கோலத்து ஆயிழை இருப்பக்

காணம் பெற்றோர் கடுந்துயர் எய்தி"

என்ற அடிகள் மணிமேகலையின் சார்புணர்ச்சியை விளக்குகின்றன (Chithalai Saathanar, 2010).

## விடுதலை உணர்ச்சி

இராசமாதேவி மணிமேகலையை உதயகுமாரனின் மரணத்திற்குக் காரணமாக எண்ணுகிறாள். அதனால் மணிமேகலையை படித்திருக்க விரும்புகிறாள் அதன் பொருட்டு கல்வி அறிவில்லாத ஒரு இளைஞனை மணிமேகலையின் கற்பித்திறனை அழிக்குமாறு ஆணையிடுகிறாள் இடமிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ள மணிமேகலை யாருடைய உதவியையும் நாடாமல் ஆணுறுக் கொண்டு தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள முயல்கின்றாள் இதன் வழி மணிமேகலை பிறர் துணை இல்லாமல் தன்னை காத்துக் கொண்ட சார்பற்ற காப்புணர்ச்சியை பெற்றவள் என்பதை உணர முடிகின்றது.

## துணிவு

துணிவு என்ற சொல்லிற்கு வேமன் தமிழ்அகராதி "திடன், துண்டு, தெளிவு, நம்பிக்கை, நோக்கம் வெட்டு" என்று பொருள் தருகிறது. மணிமேகலையின் துணிவு தெளிவானதாகவும், நோக்கமுடையதாகவும் உள்ளது என்பதனை,

"எடுத்த பாத்திரத்தை ஏந்திய அமுதம்

பிடித்தவள் கையில் பேணினள் பெய்தலும்

வயிறுகாய் பெரும்பசி நீங்கி மற்றவள்

துயரம் நீங்கித் தொழுதனள் உரைக்கும்"

என்ற அடிகளால் அறிய முடிகிறது (Chithalai Saathanar, 2010). மணிமேகலை தெளிவான நோக்கமிக்கவளாக துணிவுடன் திகழ்கிறாள் தான் ஒரு பெண் தன்னால் என்ன சாதிக்க முடியும் என்று எண்ணம் மணிமேகலையிடம் எச்சூழலிலும் தோன்றவில்லை தனி ஒருத்தி ஆகவே நகரில் பசியால் துன்புற்ற மக்களுக்கு தன் கையில் இருக்கும் அமுதசுரபியின் துணைக்கொண்டு அமுது படைக்கிறாள். மணிமேகலையின் துணிவை இது வெளிப்படுத்துகின்றது.

## செயல் துடிப்புடன் இருத்தல்

மணிமேகலை உலக உயிர்களின் பசி துன்பம் போக்குவதற்காக அமுதசுரபியை கையில் ஏந்தியவள்.

"பிறத்தலும், மூத்தலும், பிணிப்பட்டு இரங்கலும்

இறத்தலும் உடையது இடும்பை கொள்கலம்"

என்று மணிமேகலை கூறுகிறது (Chithalai Saathanar, 2010).

சக்கர பாலக்கோட்டம் என்னும் சுடுகாடு மணிமேகலையில் மெயின் நெறி உணர்த்துவதாக கூறப்பட்டுள்ளது சுடுகாட்டில் தவணரியில் செல்லும் துறவிகள் பெருஞ்செல்வர் அண்மையில் மகுபெற்ற இடம் மகளிர் அறமறியா இடம் சிறுவர் முதியோர் இல்லையோர் ஆகியோரை வேறுபாடு இல்லாமல் கொழுந்தொழிலை உடைய எமன் கொன்று குவிக்க அழல் வாயை உடைய சுடலை தின்ன கண்டும் மிக்க செல்வமாகிய கல்லை உண்டு கழித்து மேன்மை தரும் நல்ல அறநதியிலே விருப்பமின்றி வாழும் மக்களை காட்டிலும் சிறந்த அறிவிலிகள் இல்லை என்று நிலையாமை உணராமல் செருக்கோடு வாழும் மக்களைப் பற்றி மணிமேகலா தெய்வம் எடுத்துரைக்கிறது.

"யாங்கணும் பரந்த ஓங்கு இரும்பறத்தலை

தவத்துறை மாக்கள் மிகப்பெரும் செல்வர்

ஈற்று இளம் பெண்டிர்ஆற்றா பாலகர்

முதியோர் என்னான் இளையோர் என்னான்

கொடுந்தொழிலாளன் கொன்றனன் குவிப்ப இவ்

அழல் வாய் சுடலை தின்னக் கண்டும்

கழிபெரும் செல்வக் கள்ளாட்டு அயர்ந்து

மிக்க நல்லறம் விரும்பாது வாழும்

மக்களின் சிறந்த மடவோர் உண்டோ?"

மனிதன் இளமை நிலையானது என எண்ணுகிறான் (Chithalai Saathanar, 2010). அவன் அறச்செயல்கள் புரிவதற்கு இளமை பயன்பட வேண்டும் என்கிறாள். உடலும் செல்வம் நிலையில்லை என்பதற்காகவே சக்கரவாளக் கூட்டத்தை எடுத்துரைத்திருக்கிறார்.

## தனிமனித உளவியல்

தனிமனித உளப் பாங்கின் தன்மை பலவாக இருப்பினும் குறிப்பிட்ட சில உளப்பாங்குகள் மணிமேகலைக்கு உரியவையாக ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு ஏதுவாக அமைகின்றன. அவை மனப்பக்குவம், தன்னிலை அறிதல், தூண்டல் உணர்வு ஆகியவையாக அமைந்திருக்கின்றன.

## மனப்பக்குவம்

மனப்பக்குவம் என்பதில் ஒருவரது பொறுப்புணர்ச்சி, தன்னம்பிக்கை, தன்னடக்கம், தன் கட்டுப்பாடு முதலியன அடங்கும். க்ரியாவின் தற்காலத் தமிழகராதி மனப்பக்குவம் என்று சொல்லிற்கு, "எதையும் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகாமல் எதிர்கொள்ளும் மனத்தின் தன்மை" என்று பொருள் தருகிறது.

## தன்னிலை அறிவு

மணிமேகலை தன்னிலைறிவு கொண்டவளாக திகழ்கிறாள். புத்த பீடிகையைக் கண்டு தன் பிறப்பினை அறிகிறாள். முற்பிறவி மட்டுமல்லாது, நிகழ்காலத்தில் நடைபெற இருக்கும் செயலையும் முன்னரே அறியக்கூடியத் தன்மை பெற்றவளாக விளங்குகிறாள். உதயகுமாரனின் பழம் பிறப்பினை அறிந்ததோடு மட்டுமல்லாமல், தண்டம் உள்ள அமுத சுரபியால் பிறர் பசி போக்கிய பெருமையினையும் பெறுகிறாள்.

## தூண்டல் உணர்வு

தூண்டல் என்பது ஒருவரின் செயலை தூண்டி விடக்கூடிய ஒரு உணர்வாகும். தூண்டல் என்பது ஒரு உறுப்பைச் செயல்படுத்த வைப்பதாகும். இவ்வுணர்வை நடத்தையின் எழுச்சி, இயக்கம், தொடரோட்டம் என்று கூற முடிகிறது "மனதின் அகப்புறத் தேவைகளின் வெளிப்பாட்டை செயல் தூண்டல் உணர்வாகும்" என்பர். மணிமேகலை தான் மட்டும் அறத்துடன் அல்லாமல் பிறரையும் நல்லறம் மேற்கொள்வதற்கான புறத்தூண்டல் காரணியாகச் செயல்படுகிறாள் என்பதை,

"உயர்நிலை உலகம் காத்தலின்றி நீ

உயர்நிலை உலகம் வேட்டனையாயின்

இறுதி உயர்க ளெய்தவும் இறைவ

பெறுதி விரும்பினை யாகுசை என்றே"

என்ற அடிகளின் வாயிலாக மணிமேகலையின் பேச்சுத் திறனால் புண்ணிய அரசனின் ஊக்கி தூண்டப்படுவதனை அறிய முடிகிறது (Chithalai Saathanar, 2010).

## முடிவுரை

மனித நடத்தைகளை பற்றி கூறும் உளவியல் கூறுகள் மணிமேகலையில் பொருந்தி வருகின்றன. உளவியல் என்பது அறிவியலில் பிறந்த கலை என்கிற கூற்று பொருத்தமாக அமைந்திருக்கிறது. மனிதர்களிடம் ஏற்படுகின்ற இன்ப துன்ப உணர்வுகளுக்கு காரணம் மனமே ஆகும். மனமானது சூழ்நிலைக்கு தக்கவாறு மாறுகிறது. சூழ்நிலைதான் மனிதனின் நடத்தையை தீர்மானிக்கிறது. மணிமேகலை உயிர்களிடத்தில் மிகுந்த இரக்க குணம் கொண்டவள். பசிப்பிணி என்னும் கொடிய நோயை அமுத சுரபியின் உதவியால் போக்க முடிந்தவள். இராசமாதேவியின் மகன் இறப்பிற்கு மணிமேகலையே காரணம் என்ற தவறானப் புரிதலில் மணிமேகலைக்கு பல்வேறு இன்னல்கள் ஏற்படுகின்றன. அத்தகைய துன்பங்கள் யாவற்றையும், தனக்கு கிடைத்த வரத்தின் துணையால் கடந்து வந்த சிறப்புமிக்கவள். பிற சமயக் கருத்துக்களை ஆராய்ந்து அறிந்து, அதன் மூலம் தான் பின்பற்றிய பௌத்த சமய கொள்கையே சிறந்தது என்று, அதனைப் பரப்புவதற்காக இளம் வயதிலேயே துறவியாக வாழ்க்கையை வழிநடத்திய மணிமேகலையை உளவியல் கண்ணோட்டத்தில் ஆய்ந்தது கட்டுரையாக அமைந்திருக்கிறது.

## References

Catheraverpillai, N. (1984) Tamil Sollagarathim Asian Education Service, New Delhi, India

Chithalai Saathanar, (2010) Manimegalai, Kizhakku Pathippagam, Chennai, India.

Hemalatha, M. (2020) The Buddhism Morality in The Epic Manimekalai. International Research Journal of Tamil, 2(3), 117-122. https://doi.org/10.34256/irjt20313

Kanchana, R. (2000) Ilakiyamum Ulaviyalum, Vishnupriya Pathippagam, Madurai, India

Meenaktchi Sundaram, A. (2009) Katral matrum Manitha valarchi ulaviyal, Kavimalaya Publications, Chinnalampatti, India

TU, (1991) Valviyal Kalanjiyam Thoguthi 5, Tamil University, Thanjavur, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License